தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க் கிழமை, 1972 மார்ச் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Postage stamp in memory of late Thiru Muthuramalinga Thevar.

*331 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have urged the Central Government to issue a stamp of late Thiru Muthuramalinga Thevar; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) காலஞ்சென்ற திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் நினைவாக ஓர் அஞ்சல் தலை வெளியிட இந்திய அரசின் முடிவை விரைவில் இவ் வரசுக்குத் தெரிவிக்குமாறு, இந்த அரசு 14–10–1971 அன்று அஞ்சல்-தந்தித் துறைத் தலைமை இயக்குநரைக் கேட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தமிழ்நாட்டைச் சார்ந்த எத்தனை பெரியவர்களுடைய பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுபோல், திரு. தளவாய் அரியநாத முதலியார் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட 27—1—1971 அன்றும், திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று 20—9—1971 அன்றும், திரு. வ. உ. சி. அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட 16—11—1971 அன்றும், டாக்டர் அழகப்பச்

செட்டியார் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிட 4—3—1972 அன்றும் அஞ்சல்-தந்தித் துறை தலைமை இயக்குநர் அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : திரு. பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் அவர்களின் நினைவாக ஒரு விசேஷ அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று நமது அரசு கோரிக்கை அனுப்பி ஐந்து மாத காலம் ஆகிவிட்டது. அதற்கு இன்னும் அவர்கள் பதில் அனுப்பாத நிலையில், அதை ஞாபகப்படுத்தக்கூடிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 14—2—1972 தேதியிட்ட இடைக்கால பதில் ஒன்று, அஞ்சல்-தந்தித் துறைத் தலைமை இயக்குநரால் அனுப்பப்பட்டு அது மாநில அரசுக்குக் கிடைத் திருக்கிறது. இந்தக் கோரிக்கை மத்திய அரசால் அமைக்கப் பட்ட அஞ்சல் தலை ஆலோசனைக் குழுவின் முன்னால் வைக்கப் படும் என்றும், அந்தக் குழு 1973-ம் ஆண்டுக்கான 'ப்ரோக்ராம்' இன்னின்னாருடைய நினைவாக அஞ்சல் தலைகள் வெளியிடுவது என்கிற நிரலைப் பரிசீலனைக்கு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அதற்குப் பிறகு நமக்கு உரிய பதில் கிடைக்கும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

திரு. மு. பழனிவேலன் : தலைவர் அவர்களே, பன்னீர்செல்வம் அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிட அரசு ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்ற முயற்சி இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்பொழுது மாநிலத்தின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கிற முயற்சிகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்ட பிறகு, அதன் தொடர்பாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவைகளில் அந்த முயற்சியும் ஒன்றாகும்.

திரு. எஸ். வடிவேல் : தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னணி வீரரும், தமிழகத்தின் தலைசிறந்த தலைவருமான திரு. ப. ஜீவா னந்தம் அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிட அரசு பரிந்துரைக்குமா ?

1972 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. ப. ஜீவானந்தம் அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிடப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போலவே ஆர்வம் உண்டு. திரு. பன்னீர்செல்வம் அவர்களைப் பற்றிய கேள்விக்கு விடையளித்ததையொட்டி, அந்த முயற்சியின் தொடர்பாக இந்த முயற்சியும் மேற்கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தொழிலாளர்களுடைய தலைவர்களில் மிக முக்கியமான தியாகி திரு. என். ஜி. ராமசாமி அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிட அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்படி வரிசையாக ஒவ்வொருவரும் தபால் தலை வெளியிடவேண்டும் என்று கோரும் போது, நிலைமை என்னவென்றால், இப்போதே அங்கு இந்த ஆண்டு தபால் தலைகள் வெளியிட வேண்டுமென்று 174 கோரிக்கைகள் மத்திய அரசுக்கு வந்திருப்பதாகவும், அவை பரிசீலிக்கப்படுவதாகவும் நமக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே இவைகளெல்லாம் நிதானமாக பொருத்திருந்துதான் செய்ய வேண்டும்.

Sub-Treasury for Pallipat

* 332 Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to have a Sub-Treasury at Pallipat in Chingleput district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டில் உள்ளவர்கள் 24 மைல்களுக்கப்பாலுள்ள திருத்தணிக்குச் செல்ல வேண்டியிருப்பதால், பள்ளிப்பட்டிலேயே ஒரு சப்-ட்ரெஷரி அமைக்க விரைவில் அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தணிக்கும் பள்ளிப்பட்டுக்கும் இடையே உள்ள தூரத்தை விளக்கிச் சொன்னதற்கு நன்றி, திருத்தணியில்